மிகப்பெரிய பொய்



மிகப்பெரிய பொய்



நான் பொய் சொன்னேன்.
மிகப்பெரிய பொய்.
“ஜாடியில் இருந்த
பிஸ்கட்டுகளை நீ எடுத்தாயா ?“
என்று அப்பா கேட்டார்.
“இல்லை “என்று சொன்னேன்.





நான் தான் அதை சாப்பிட்டேன்.
ஆனால் இல்லை என்று பொய்
சொன்னேன்.
நான் உண்மையைச்
சொல்லியிருக்கலாம்.
"நான் தான் சாப்பிட்டேன்"
என்று சொல்லியிருக்கலாம்.
ஆனால் அப்பாவிற்கு பயங்கர
கோபம் வந்திருக்கும்.



அம்மாவிற்கும் கோபம் வந்திருக்கும்.





அக்காவிற்கும் கோபம் வந்திருக்கும்.

இப்போது நான் ஏன் சாப்பிட்டேன் என்று வருந்துகிறேன். ஏன் பொய் சொன்னேன் என்று வருத்தப்படுகிறேன். நான் இப்போது என் பொய்யில் மாட்டிக்கொண்டேன்.



ஒருவேளை அதனுடன் பேசிப் பார்க்கலாம்." ஓடிப் போ பொய்யே. என்னை விட்டு விடு. நீ ஒருபோதும் திரும்பி வராமல் இருந்தால் ஐந்து ரூபாய் தருகிறேன் “



அது இன்னும் இங்கே தான் இருக்கிறது.

It's still here.



"இங்கே பார், பொய். நீ எனக்கு தேவையில்லை, உன்னை எனக்கு பிடிக்கவில்லை. என்னால் உன்னைக் பார்க்க கூட முடியவில்லை, எனவே நீ இங்கு இல்லை. நீ இருக்கமுடியாது. நீ இல்லை. நீ இல்லை. நீ இல்லை!



நீ இன்னமும் ஏன் இங்கே இருக்கிறாய்? உன்னை என்னால் பார்க்க முடியாவிட்டாலும் எனக்குத் தெரியும் நீ மெதுவாக பெரியதாக வளர்ந்து வருகிறாய். பொய்யே, நீ மிக பெரியதாக வளர்ந்து விட்டாய்.






"நீ மிகவும் பெரிய, பிரமாண்டமான
சுமை. உன் வழவழ தலையும்



சளி ஒழுகும் மூக்கும், பெருத்த தொப்பையும்
சே! அருவருப்பாய் இருக்கிறாய் பொய்யே."



"உனக்கு புத்தியில்லை. நீ மிகப்பெரிய முட்டாள்.
உன் பெயரைக் கூட எழுத முடியாது என்று பந்தயம் கட்டுகிறேன். முயற்சி செய்து பார்.

பெய் , போய் , பை . எல்லாம் தவறு.



உன் பெயர் பொய். நீ ஒரு முட்டாள்.

நான் உன்னைவிடவும் புத்திசாலி. பிறகு
எப்படி உன்னிடம் மாட்டிக்கொண்டேன்?



நீ சென்று மிக மோசமான கெட்டவன் ஒருவனுக்கு தொல்லை கொடுக்க முடியாதா? என்னைப் போன்ற ஒரு நல்ல பையனை விட்டுவிடு.



நீ தான் என் வயிற்றை அமுக்குகிறாயா? வலிக்கிறது. போய் விடு. போய் விடு. சரி பொய்யே. நான் தோல்வியை ஒப்புக்கொள்கிறேன்.





அப்பா ! அம்மா !

உங்களிடம் பொய் சொல்லிவிட்டேன். பிஸ்கட்டை சாப்பிட்டது யார் என்று எனக்குத் தெரியும். எனக்கு மிகவும் பிடித்த ஒருவர் தான் சாப்பிட்டார். அவர் முதலில் ஒன்றை சாப்பிட்டார், பிறகு இன்னொன்று இன்னொன்று என்று ஒவ்வொன்றாக எல்லா பிஸ்கட்டையும் சாப்பிட்டு விட்டார்.



ஆமாம், உங்கள் மகன், நான் தான் எல்லா பிஸ்கட்டுகளையும் சாப்பிட்டேன்.



நீங்கள் இதற்காக என்னை தண்டிக்கப் போகிறீர்களா அப்பா? அம்மா?

என்னது? இருவரும் பேசி
முடிவெடுப்பீர்களா?
சரி!
சரி!




பொய் என்னை விட்டுப் போய்விட்டது.
ஒருவேளை வேறொருவரை வருத்தப்
போயிருக்கலாம்.




அல்லது உலகின் மறுபக்கத்தை அடைந்திருக்கலாம்.
அல்லது நட்டநடுக் கடலில் தத்தளித்துக்
கொண்டிருக்கலாம்.



அல்லது ஏதோ ஒரு கரையில் ஒதுங்கி,
காப்பாற்றப்படுவதற்காக காத்திருக்கலாம்.



அல்லது ஒரு பெரிய நகரத்தில் தொலைந்து போயிருக்கலாம்.



அல்லது ஒரு காட்டில் என்னைப்போன்ற நல்ல பையனை விட்டுவந்திருக்கக்கூடாது என்று ஏங்கிக்கொண்டிருக்கலாம். ஆனால் பொய் என்னிடம் திரும்பி வராது. இனி என்னிடம் பொய் இல்லை.



இது தான் உண்மை. முழுமுதல் உண்மை.

முடிவு